பொது வர்த்தகம் தொடர்பான செயற் குழு

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

2022.11.25

(2023.12.31ஆந் திகதிக்கான முன்னேற்றம்)

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வின்
பொது வர்த்தாக குழுவின் இரண்டாவது அறிக்கை
பொது வர்த்தகம் தொடர்பான செயற்குழு – 2022.11.25

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
02.	நிறுவனத்தை மறு சீரமைத்தல்	i. மேற் குறிப்பிட்ட 2016.08.23 ஆந் திகதிய அமைச் சரவை முடிவினை செயற்படுத்துவது தொடர்பாக தற்போதைய நிலை சம்பந்தமாக அமைச்சர வைக்கு தெரியப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல். ii. 2016இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம், தற்போதைய அமைச்சர வையினால் மீண்டும் உறுதிப்படுத்தல் இருவாரங் களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். iii. ஆர்வத்தை வெளிப்படுத்து வதற்கான(EOI) அழைப்பு கோருவது தொடர்பாக மற்றும் அமைச்சர வைக்கு தெரியப்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் இருமாதங்களுக் குள் செயற் குழுவுக்கு அறிக்கைப் படுத்தல்.	அரச மற்றும தனியார் பங்குடமையின் கீழ் , (PPP) இன் கீழ் கடற்றொழில் கூட்டுத்தாபனம் எதிர்வரும் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பாக அமைச்சரவைக்கு அமைச்சரவை மசோதா சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.	இது தொடர்பாக கௌரவ அமைச்சருக்குத் தெரியப்படுத்தி, அந்த ஆலோசணையின் பேரில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், மேலும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சால் வழங்கப்பட்ட அரச வணிக மறுசீரமைப்பு செய்யும் பட்டியலில் இந்த நிறுவனம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
03.	நிறுவனத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்	i. புதிய நிறுவனத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு, உடனடி யாக நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் மூன்று மாதத்துக் குள் அதன் முன்னேற்றம் சம்பந்தமாக செயற் குழுவுக்கு அறிக்கைப் படுத்தல்.	இதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுருக்கக் குறிப்பும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.	கோப் குழுவில் கலந்துரையாடப்பட்ட மேற்படி விடயம் தொடர்பில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்தில் உள்ள பலவீனங்கள் மற்றும் மாறான நடைமுறையின் காரணமாக அத் திட்டம் நீக்கப்பட்டு 2024/25 மற்றும் 26 ஆகிய 03 ஆண்டுகளுக்கு விரிவான திட்டம் தற்போது வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வரைவு மேற்கொள்ளப்பட்ட விரிவான திட்டம் பற்றி கடந்த பணிப்பாளர் சபையின் 02 கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. இங்கு இதில் திருத்தப்பட்ட விடயங்கள் மற்றும் தற்போது நிறுவனத்தின் உயர் முகாமையாளர் பதவிக்கு சேர்க்கப்பட்ட பொது முகாமையாளர், பிரதி பொதுமுகாமையாளர் மற்றும் பிரிவுத் தலைவரினதும் மாவட்ட முகாமையாளரினது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை சேர்த்து திருத்தி மிக விரைவாக 2024ஆம் வருடத்தின் முதலாவது அல்லது இரண்டாவது பணிப்பானர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்து அந்த அனுமதியை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டுகளுக்குரிய நிறுவனத்தின் செயற்பாட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அது எதிர்வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. (இணைப்பு 01 - 2024 செயற்பாட்டுத் திட்டம்)

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
04.	பணிப்பாளர் சபைக் கூட்டம்			மாதத்துக்கு ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் வீதம் நடாத்துவதற்கு கடந்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையேற்படும் விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
05.	Sailfish (தலபத்) க்கு ஒரு மாற்று அறிமுகப்படுத்தல்	i. அரச வைத்திய சாலைகளில் உள் நோயாளர்களின் உணவுக்கு தலபத் மீனுக்குப் பதிலாக தேசிய மீன் வழங்கும் சாத்தியம் குறித்து வைத்திய துறை நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் வழிமுறைகள் அடங்கிய அறிக்கை ஒன்று இரு வாரங் களுக்குள் செயற் குழுவுக்கு சமர்ப்பித்தல்.	தலைவரினால் இது சம்பந்தமாக சுகாதார அமைச்சுடன் கலந்துரை யாடப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மாற்றுகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.	இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மூலம் நாடு முழுவதிலும் அமைந்துள்ள மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபை மூலம் நிர்வகிக்கும் ஆதார வைத்தியசாலைகளுக்கு உள்நோயாளர்களுக்கு உணவுக்கு மீன் வழங்கப்படுவதுடன், இங்கு பல வைத்திய சாலைகளுக்கு கட்டளையாக வழங்கப்படுவது தலபத் மீனாகும். தேசிய உற்பத்தியில் இருந்து கிடைக்கும் தலபத் மீன் நுகர்வுக்கு போதுமானதாக இல்லை. அத்துடன் வருடாந்தம் தலபத் மற்றும் கொப்பரன் மீன்கள் மிகப் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் வைத்திய சாலையின் கட்டளைக்கு போதுமான அளவு தலபத் மீன் உள்ளூரில் பெற முடியாதுள்ளது. அத்துடன் இறக்குமதி செய்யப்படும் மீன் தனியார் வழங்குனர்களிடமிருந்து பெற வேண்டியுள்ளது. இது தொடர்பாக மாற்று வழங்கல் தொடர்பாக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் 2022.10.20 ஆந் திகதி சுகாதார அமைச்சின் கடிதத்தின் மூலம் வைத்திய சாலைகளுக்கு வழங்கக்கூடிய மாற்று மீன் வகை குறிப்பிடப்பட்டுள்ளது. சில வைத்தியசாலைகள் மாற்றுகள் ஏற்காமையால் 2023ஆம் ஆண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக மீன் இறக்குமதி செய்வதன் மூலம் 2024ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின செயற்பாட்டுத் திட்டத்தின் ஊடாக இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும்

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
				தலபத் மீன் கொள்கலன் அளவின் மூலம் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.(இணைப்பு 02- 2022.10.20 ஆந் திகதி சுகாதார அமைச்சின் கடிதம்) (இருப்பினும் இதுகுறித்து மீண்டும் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கிறோம்)
06.	கூட்டுத்தாபனத்தின் பணிக்குழு	i. முகாமைத்துவ சேவை திணைக் களத்தின் அனுமதியுடன் குறித்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து இரு மாதங்களுக்குள் செயற் குழுவுக்கு அறிக்கைப் படுத்தல்.	முக்கிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வரி அமைச்சின் மூலம் 2022.11.04ஆந் திகதி அரச வணிக திணைக்களத்திடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், இதற்குப் பரிந்துரை கிடைத்தவுடன் உடனடியாக 2023இன் முதல் காலாண்டுக்குள் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொண்டு நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கிறோம்.	சிரேஷ்ட மட்டத்திலான 04 பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான அதிகாரிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் பொதுமுகாமையாளர் பதவிக்கு 2023.08.02 ஆந் திகதி நிரந்தர அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை பதவிகளுக்கான ஆட் சேர்ப்புக்கு 2023.12.06 ஆந் திகதி 1063வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
07.	கடன் அறவிடுதல்	i. கடன் பெறுனர்களின் சரியான அடையாளத்தை அறிந்து கொள்ளும் வசதிக்கு கடன் அறவிடுவதற்கான செயல்முறைக்கு ஒரு வழிமுறை தயாரித்தல். ii. கடன் பெறுனர் களின் மற்றும் கடன் பெறுனர் களின் பதிவேடு தயாரித்து, மூன்று மாதங்களுக்குள் செயற் குழுவுக்கு சமர்ப்பித்தல்.	2022.12.12ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	• கூட்டுத்தாபன கடன் சேகரிக்கும் பொறிமுறையை வலுப்படுத்துவதற்கு தற்போது விரிவான கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், தலைமை அலுவகத்தின் நிதிப் பிரிவின் கீழ் உபபிரிவாக செயற்படும் கடன் வசூலிக்கும் பிரிவை மேலும் பலப்படுத்தி சகல மாவட்ட அலுவலகங்களின் மற்றும் தலைமை அலுவலகத்தினதும் செயற்பாட்டுப் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் ஒரு அதிகாரிக்கு கடன் வசூலிப்பதற்கு நியமிப்பதற்கும், இந்த அதிகாரியின் நேரடி கண்காணிப்பில் கடன் வசூலிக்கும் பிரிவுக்கு மாற்றுவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. • மேலும், நிர்வாக மற்றும் செயற்பாட்டு பிரிவினால் கடன் அடிப்படையில் மீன் வெளி நிறுவனங்களுக்கு மீன் வழங்கும்போது பாதுகாப்பு வைப்பீடு வைத்திருப்பதுடன், எழுத்து மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்தி மீன் கடனுக்கு விற்பனை செய்ய வேண்டுமென புதிய சுற்றறிக்கை வெளியிடுவதற்கும் நிறைவேற்றாளர்களில் உள்ளக கடனாளிகளின் கடன் மீதி தொடர்பான பொறுப்பு சம்பந்தப்பட்ட முகாமையாளருக்கு மாற்றுவதற்கு தற்போதுள்ள சுற்றறிக்கையில் திருத்தம் செய்து புதிய சுற்றறிக்கை வெளியிடுவது தொடர்பான வரைவு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.(இணைப்பு - 03) • உள்ளக நீண்ட காலமாக இருக்கும் கடன் மீதி சம்பந்தமாக அந்த விற்பனை உதவியாளர்களுக்கான சட்டம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 19 பில்லியன் கடன் மீதி அறவிடப்பட்டுள்ளது.

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
				நிறுவனத்தின் ஊழியர்களை விற்பனை உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளும்போது நிதி பரிவர்த்தனை நடவடிக்கை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு வைப்புத் தொகை அவர்களிடமிருந்து பெறுவது நடைமுறையில் கடினமான பணியாக இருப்பதுடன், கணக்காய்வாளரின் பரிந்துரைக்கமைய, இவர்களை நிறுவனத்தின் கடனாளியாக காட்டுவது ஒரு சிக்கல் நிலையாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஏற்றுக் கொண்டாலும் மீன் வழங்கும்போது மற்றும் பணம் சேகரிக்கும்போது, அவற்றை கணக்கிடுவதற்கு விற்பனை கடனாளியாக (உள்ளக) பராமரிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட வேண்டும். தற்போது மாதாந்த விற்பனை நடவடிக்கை மற்றும் பணம் வங்கியிலிடல் முறையாக புதுப்பிக்கப்பட வேண்டும் மேலும் பழைய கடன் நிலுவை அறவிடும் பொறிமுறையை வலுப்படுத்து வதற்கான நடவடிக்கை உயர் மட்ட நிர்வாகத்தின் தலையீட்டில் இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. • நிர்வாக கடன் மீதிகளை முறையாக புதுப்பித்தல் மற்றும் தகவல் சேகரிக்கும் கால தாமதத்தை சரி செய்வதற்காக கணிணி இயக்க முறைமை நிறுவுவதற்கு 2024இன் முதல் காலாண்டுக்குள் இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. (2023.12.31ஆந் திகதிக்கு சரி செய்யப்பட்ட கடனாளிகளின் மற்றும் கடனாளிகளின் பட்டியல்) இணைப்பு – 04

<table>
<tr><th>தொடர் இல</th><th>கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது</th><th>செயற்குழுவின் பரிந்துரை</th><th>2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்</th><th>தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)</th></tr>
<tr><td>08.</td><td>நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக் காமை</td><td>i. நிதிக் கூற்று மற்றும் வருடாந்த அறிக்கை தொடர்பான அறிக்கை இரு வாரங்களுக்குள் செயற் குழுவுக்கு சமர்ப்பித்தல்.</td><td>2023.12.12ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.</td><td>2017ஆம் அண்டுக்கான அறிக்கையின் வரைவு தயாரிக்கப்பட்டு சபை ஏற்றுக் கொள்வதற்கு கடற்றொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்- பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று தற்போது தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கு வழங்கப்பட்டு, அது அந்த கணக்காய்வு செய்யப்பட்ட வரைவுவின் நிர்வாக அறிக்கை கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2019,20,21,22ஆம் வருடங்களுக்குரிய நிதிக் கூற்றும் வரைவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வரைவு அரச வர்த்தக திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த அமைச்சு முகாமைத்துவ குழுவும் கலந்துரையாடியதன் பிரகாரம் இந்த கடந்த நிதிக் கூற்று மிக விரைவில் கணக்காய்வு செய்வதற்கு கணக்காளர் அதிபதிக்கு 2023.12.25ஆந் திகதி கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>நிதி அறிக்கை</th><th>தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கு கணக்காய்வுக்காக சமர்ப்பித்தல்</th><th>கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை பெற்றுக் கொள்ளல்.</th><th>ஏற்றுக் கொள்ளல்</th></tr>
<tr><td>2017</td><td>2021.03.09</td><td>2022.10.10</td><td>2024.02.29</td></tr>
<tr><td>2018</td><td>2023.11.13</td><td>2024.01.26</td><td>2024.03.30</td></tr>
<tr><td>2019</td><td>2024.03.15</td><td>2024.04.30</td><td>2024.05.20</td></tr>
<tr><td>2020</td><td>2024.05.15</td><td>2024.06.30</td><td>2024.07.15</td></tr>
<tr><td>2021</td><td>2024.07.20</td><td>2024.08.30</td><td>2024.09.20</td></tr>
<tr><td>2022</td><td>2024.09.15</td><td>2024.10.15</td><td>2024.10.30</td></tr>
</table>
</td></tr>
</table>

தொடர் இல	கலந்துரை யாடலுக்கு உட்படுத்தப் பட்டது	செயற்குழுவின் பரிந்துரை	2023.01.30ஆந் திகதிக்கான முன்னேற்றம்	தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை (2023.12.31)
09.	ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்துக்கு நிலுவை பங்களிப்புத் தொகை	i. நிலுவைத் தொகையை நிரப்புவதற் கான செயற் படுத்தக் கூடிய செயற்பாட்டு வழிமுறை பற்றிய அறிக்கை இரு வாரங்களுக் குள் செயற் குழுவுக்கு சமர்ப்பித்தல்.	நிறுவனத்தை இலபமீட்டும் நிலைக்கு மாற்றி மாதாந்தம் முறையாக அதற்குரிய தொகையை செலுத்துவதற்கும், நிலுவைத் தொகை தொடர்பாக கௌரவ அமைச்சருக்கு கடிதத்தின் மூலம் விண்ணப்பித்து அமைச்சரவை பத்திரத்தின் மூலம் திரைசேரியிலிருந்து பணம் பெறுவதற்கு அல்லது திரைசேரி பிணையாளராக நீண்ட கால வங்கிக் கடன் பெற்று இந்த நிலுவையைத் தீர்த்தல்.	இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் கடந்த பல வருடங்களாக அனேக நிர்வாகிகள் இலாப ஏதும் இன்றி தலைமை அலுவலகத்தை நிர்வகிப்பதற்காக பெரும் மத்திய நிர்வாக செலவினை செலவிட வேண்டியுள்ளதுடன், இந்த தொழில் முயற்சிக்கான கொடுப்பனவு வணிகர்கள் மற்றும் ஏனைய வழங்குனர்களுக்கு பணம் செலுத்தாமையால் பெருமளவு நிலுவை ஏற்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனத்துக்குரிய அசையும் பொறுப்புகள் செலுத்த வேண்டியுள்ளது. இதில் 40%க்கும் மேற்பட்ட பொறுப்பு கூட்டுத்தா பனத்துக்குரிய தொழில் முயற்சிக்கான கொடுப்பனவுக்காகும். 2016ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரையான பகுதி ரீதியாக மற்றும் முழுமையாக ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பணம் செலுத்த வேண்டியுள்ளதுடன், ஊழியர் பொறுப்பு நிதியத்துக்கும் சிறிதளவு செலுத்த வேண்டியுள்ளதுடன் தற்போது நீதிமன்ற கட்டளையின் பேரில் இந்த நிலுவைக்கு பணம் செலுத்தப் பட்டுள்ளதுடன் 2022ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியிலிருந்து மாதாந்தம் இந்த பங்களிப்புத் தொகைக்கு முறையாக செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2024இல் நிறுவனத்தினால் எதிர்பார்க்கப் பட்டவாறு கூட்டுத்தாபனத்துக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் மற்றும் பல வருடங்களாக பயன்படுத்த முடியாத சிதைந்த பொருட்கள் திறந்த ஏலத்தில் விடுவதன் மூலம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த பணமும் இந்த நிலுவைத் தொகைக்கு பயன்படுத்த எதிர்பார்ப்பதுடன் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் கடற்றொழில் அமைச்சுக்கும் இந்த நிதியை செலுத்துவதற்கு சில சலுகை வேலைத் திட்டம் பயன்படுத்துவதற்கு, நீண்ட கால வங்கி கடன் பெறுவதற்குத் தேவையான பரிந்துரை மற்றும் வழிகாட்டுதலையும் மேற்கொள்வதற்கும் தற்போது எழுத்து மூலமாக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கே.என். குமாரி சோமரத்ன
சேயலாளர்,
கடற்றொழில் அமைச்சு

K.N. Kumari Somaratne
Secretary
Ministry of Fisheries
2nd Floor, New Secretariat Building,
Maligawatta, Colombo 10.

டக்ளஸ் தேவானந்தா
கௌரவ அமைச்சர்,
கடற்றொழில் அமைச்சு

6/2/24

Douglas Devananda M.P
Jaffna Electoral District
Secretary General, EPDP
Minister Of Fisheries
New Secretariat, Maligawatta, Colombo 10